# மனித உரிமைகள் கற்கை நிலையம்
# பேராதனைப் பல்கலைக்கழகம்

## 2023/2024

பேராதனைப் பல்கலைக்கழக மனித உரிமைகள் கற்கை நிலையத்தினால் 2023 இல் நடத்தப்படவுள்ள மனித உரிமைகள் சான்றிதழ் மற்றும் டிப்ளோமா கற்கை நெறிகளுக்குத் தகுதி பெற்ற இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## விண்ணப்பம் கோரல்

### மனித உரிமைகள் சான்றிதழ் கற்கை

கற்கைநெறிக்கான தகைமைகள்

- பேராதனை பல்கலைக்கழகம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மாணவராக பதிவு செய்யப்பட்டிருத்தல்.

அல்லது

- க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். அத்துடன் பின்வருவனவற்றுள் ஏதாவதொன்றினை உறுதிப்படுத்தக் கூடியவராக இருத்தல்.
- சிவில் சமூக செயற்பாடுகளில் ஈடுபடுபவராக இருத்தல்.
- மனித உரிமைகள் அல்லது ஜனசமூக அபிவிருத்தி பரப்பில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனமொன்றில் செயற்பாட்டாளராக இருத்தல்.
- 02 வருட கால சேவை அனுபவத்தைப் பெற்ற அரச அல்லது தனியார் நிறுவனமொன்றில் சேவை புரிபவராக இருத்தல்.

அல்லது

- க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்து, அரச சார்பற்ற நிறுவனமொன்றில் குறைந்தது 05 வருட கால சேவை அனுபவம் பெற்றவராக இருத்தல்.

கற்கை நெறிக்கான காலம்:- 2 மாதங்கள்
கற்கை நெறிக்கான கட்டணம்: ரூபா 12,000/=
மொழி மூலம்: தமிழ் மற்றும் சிங்களம்

### மனித உரிமைகள் டிப்ளோமா கற்கை

கற்கைநெறிக்கான தகைமைகள்

- எமது நிலையத்தின் நிர்வாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் சான்றிதழ் கற்கைநெறியில் சித்தியடைந்து இருத்தல்.

அல்லது

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்புடன் தொடர்புடைய வகையில் மனித உரிமையினை ஒரு பாடமாக கற்றிருத்தல்.

அல்லது

- க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு மனித உரிமைகள் மற்றும் சனசமூக அபிவிருத்தியோடு தொடர்பான செயற்திட்டங்களை ஒழுங்குப்படுத்துவதில் அல்லது பங்குபற்றியமையை உறுதிப்படுத்தக் கூடிய அனுபவத்தினைக் கொண்டிருத்தல்.

அல்லது

- க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். அத்துடன் தாம் பணிபுரியும் அரச, அரச சார்பற்ற அல்லது தனியார் நிறுவனம் ஒன்றில் மனித உரிமையினை ஊக்குவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டமையினை எழுத்து மூலமாக உறுதி செய்தல்.

கற்கை நெறிக்கான காலம்:- 12 மாதங்கள்
கற்கை நெறிக்கான கட்டணம்: ரூபா 25,000/=
மொழி மூலம்: தமிழ் மற்றும் சிங்களம்

கற்கைநெறிக்கான விண்ணப்பப்படிவக் கட்டணமான 1000 ரூபாவினை 0001274686 (BOC)Arts Faculty Research and fund என்ற இலக்கத்தில் உள்ள போராதனை பல்கலைக்கழக வங்கிக்கணக்கில் வைப்பில் இட்டு அதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பவும்.

கற்கைநெறிக்கான விண்ணப்பங்களை http://arts.pdn.ac.lk அல்லது http://arts.pdn.ac.lk/cshr இணையதளத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும். கற்கைநெறிக்கான விண்ணப்பபடிவத்தை 05.10.2023 இற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியவாறு கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.(பணிப்பாளர், மனித உரிமைகள் கற்கைநிலையம், கன்னங்கரா கட்டிடம், கலைப்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்)

further Information - 081 -2392634 / 081-2386481 Email- cshrpera@gmail.com